புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# ரெ. முத்து கணேசனாரின் முத்தொள்ளாயிர உரை வழியே வெளிப்படும் அரச நடைமுறைகள்

த. தீபா,
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
திருவாடானை

முனைவர் மு.பழனியப்பன்
நெறியாளர், தமிழ்த்துறைத் தலைவர்
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
திருவாடானை

முத்தொள்ளாயிரம் செவ்விலக்கிய நூல்களுள் ஒன்று. காலத்தால் பழமையானது என்கிறார் இதனை முதன் முதலில் புறத்திரட்டில் இருந்துப் பிரித்துக் கொண்டுவந்த ரா. ராகவையங்கார். இதற்கு உரை வரைந்த டி.கே. சிதம்பரநாதர் இரண்டாயிரம் வருடங்கள் பழமையானது என்கிறார். வெண்பா யாப்பில் அமைந்த பாடல்களைக் கொண்டுள்ளதால் முத்தொள்ளாயிரம் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுக்கு அடுத்துத் தோன்றியிருக்கலாம் என்று கால ஆராய்ச்சியாளர்கள் கணிக்கிறார்கள். இளம்பூரணர் முத்தொள்ளாயிரப் பாடல்களை எடுத்துக்காட்டுவதால் அவரின் காலத்திற்கு முந்தையதாக இந்நூல் எழுதப் பெற்றிருக்க வேண்டும் என்பது உறுதி. இவ்வகையில் காலத்தால் முந்தைய நூல் முத்தொள்ளாயிரம்.

சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் அரச திறத்தினை எடுத்துரைக்கும் புறநூலாகவும் , தலைவியின் காதற் சிறப்புரைக்கும் அக நூலாகவும் திகழ்கின்றது. அகப் புறம் சார்ந்த முத்தொள்ளாயிரத்தில் காதல், வீரம், அரசியல் நடைமுறைகள் கலந்து பாடப்பெற்றுள்ளன. அரச நடைமுறைகளைக் கொண்டு இந்நூலின் சமுதாயச் சூழலையும், அரசியல் சூழலையும், காலச் சூழலையும் உணர இயலும்.

இதற்கு உரை வரைந்தவர்கள் பலர். அவர்களுள் ஒருவர் காரைக்குடி கவிஞர் ரெ. முத்துக்கணேசனார் எழுதிய உரை. இனிய எளிய சொற்களில் அமைந்த உரை இதுவாகும். முத்தொள்ளாயிரப் பாடல்களுக்கு உரிய தலைப்பு தந்து, பொருளுரை, குறிப்புகள் , ஒப்புமைப் பாடல்கள் தந்து பாடல்களை விளக்கம் செய்யும் அமைப்பில் அமைந்துள்ளது ரெ. முத்துக் கணேசனாரின் உரை.''முத்தொள்ளாயிரம் கற்பனைக் களஞ்சியமாய், இன்பக் கடலாய், வீரத்தின் விளைநிலமாய், உவமை ஊற்றாய் அமைந்துள்ளது.'' [1] என்று முத்தொள்ளாயிரத்தின் சிறப்பினை எடுத்துரைக்கிறார் ரெ. முத்துக்கணேசனார்.

இவர் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்தேழாம் ஆண்டு முத்தொள்ளாயிரத்திற்கு உரை எழுதினார். அவ்வுரைநூல் சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆறு ஆண்டுகள் வித்வான் வகுப்பிற்குப் பாடமாக அமைந்த பெருமைக்கு உரியது. இவ்வுரைநூலின் வழி வெளிப்படும் அரச நடைமுறை குறித்து இக்கட்டுரை ஆராய்கின்றது.

## மன்னர்கள் சூழ மன்னன் வீற்றிருக்கை

இந்த உலகம் வானத்தைப் போன்று பரந்து விரிந்து நிற்கிறது. அவ்வானத்தில் மின்னும் விண்மீன்களாக பிற மன்னர்கள் உள்ளார்கள். அவர்களில் தலைமை வாய்ந்தவனாக சேரமன்னன் விளங்குகிறான். இதனை

''வானிற்கு வையகம் போன்றது வானத்து
மீனிற் கனையார் மறமன்னர்- வானத்து
மீன்சேர் மதியனையன் விண்ணுயர் கொல்லியர்
கோன் சேரன் கோதையென் பான்'' (சேரன் 15)

என்று மன்னர்களுள் மன்னனாக விளங்கும் சேரனைக் காட்டுகிறது முத்தொள்ளாயிரம். இதற்கு ''வானகத்திற்கு இந்த வையகம் ஒத்து விளங்குகிறது. அந்த வானகத்திலுள்ள விண்மீன்களுக்குச் சரிசமமான புகழோடு கூடியவர்கள் மன்னர்கள். சேர மன்னன், அந்த வானத்து விண்மீன்களிடையே ஒளி உமிழ்ந்து விளங்கும் திங்களுக்கு ஒப்பாக விளங்குகிறான்''[2] என்று உரை எழுதுகிறார் ரெ. முத்துக்கணேசன். மேலும் இதற்கு ஒப்புமைப் பகுதியாக வான்க ணற்றவன் மலையே வானத்து மீன கணற்றவன் சுனையே (புறம் 109) என்று புறநானூற்றுப் பாடலையும் ஒப்புமைப் பகுதியாக ரெ. முத்துக்கணேசனார் காட்டுகிறார். இதன்வழி மன்னர்கள் பலர் இருப்பது வையத்தின் இயல்பு. அதில் சிறப்புற்று விளங்குபவன் ஒருவனே என்ற கருத்தைப் பெறமுடிகிறது.

சேரன் கைவேல் சிறப்பு

சேரனின் கையில் வெற்றி பொருந்திய வேல் உள்ளது. அவ்வேலின் ஆற்றலை மன்னர்கள் குறைத்து உரைத்தால் அவர்களின் நாடு அல்லல்படும். ''அன்றலர்ந்த மலர்களால் தொடுக்கப்பெற்ற மாலையை அணிந்தவன் சேர மன்னன். முசிறி என்ற பட்டினத்தின் கோமகன். அவனுடைய ஒளி பொருந்திய இலை வடிவமான வேலைப் பழித்து, அதன் காரணமாக அவனை வெகுளுமாறு செய்த மன்னர்களுடைய நாடானது அவனுடைய வீரத்தால் பொலி அழிந்து பாழாகும். முயற்சியின்றி விளைவனாகிய அறுகம்புற்கள் மிகுதியாகப் பரவி வளரும். பேய்ச்சுரை ஆங்காங்கு படரும். தைவேளையும், நாய் வேளையும் பூத்துவளரும்''[3] என்று சேரனின் வேலின் வெற்றியைக் காட்டுகிறார் ரெ. முத்துக்கணேசன்.

வேரறுகை பம்பிச் சுரை படர்ந்து வேளை பூத்து
ஊரறிய லாகா கிடந்தனவே – போரின்
முகையவிழ்ந்தார்க் கோதை முசிறியார் கோமான்
நகையிலைவேல் காய்த்தினார் நாடு (சேரன் 22)

என்ற பாடலுக்கு வேரறுகை, சுரை, வேளை போன்றவற்றிற்குச் சரியான விளக்கம் தருகிறார் உரையாசிரியர் ரெ. முத்துக்கணேசன்.

மேலும் ஆட்சியாளர்களின் கைப் பொருள் குறித்துக் கவனமாகப் பேசுதல் வேண்டும் என்ற அரச நடைமுறையை இப்பகுதி விளக்குகிறது.

ஆறில் ஒன்றன்றோ புரவலர் கொள்ளும் பொருள்

சோழ மன்னன் வரி கொள்ளும் முறையை முத்தொள்ளாயிரத்தின் பாடல் ஒன்று விளக்குகிறது.

என்னெஞ்சு நாணு நலனும் இவையெல்லாம்
மன்னன் புன னாடன் வெளவினான் என்னே
அரவகல் அல்குலாய்! ஆறில் ஒன்றன்றோ
புரவலர் கொள்ளும் பொருள் (சோழன் 11)

என்ற இப்பாடல் சங்க இலக்கியத்தின் பின்னதான, திருக்குறளுக்குப் பின்னதான காலத்தைச் சார்ந்த வரி நடைமுறையைக் காட்டுவதாக விளங்குகிறது.

''அழகிய தோழியே! உலகில் அரசர்கள் குடிமக்களிடமிருந்து கொள்ளும் பொருள் ஆறில் ஒரு பங்கு தானே! அப்படியிருக்க காவிரி நாடனாகிய சோழ மன்னன் என்னுடைய நெஞ்சு , நாணம், மேனியழகு, நலம் இவை எல்லாவற்றையும் கைப்பற்றிக் கொண்டானே''[4] என்கிறாள் தலைவி.

புறநானூற்றில் பிசிராரந்தையார் வரி விதிக்கும் நடைமுறை பற்றி உரைக்கிறார்.

காய் நெல் அறுத்துக் கவளம் கொளினே,
மா நிறைவு இல்லதும், பல் நாட்கு ஆகும்;
நூறு செறு ஆயினும், தமித்துப் புக்கு உணினே,
வாய் புகுவதனினும் கால் பெரிது கெடுக்கும்;
அறிவுடை வேந்தன் நெறி அறிந்து கொளினே,
கோடி யாத்து, நாடு பெரிது நந்தும்;
மெல்லியன் கிழவன் ஆகி, வைகலும்
வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு,

*பரிவு தப எடுக்கும் பிண்டம் நச்சின்,*
*யானை புக்க புலம் போல,*
*தானும் உண்ணான், உலகமும் கெடுமே.*[5]

*என்ற பாடலில் மன்னன் சரியான அளவில் வரி பெற வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது. தவிரவும் ஆறில் ஒரு பங்கு என்பது சுட்டப்பெற வில்லை. சங்க காலத்தில் ஆறில் ஒரு பங்கு என்ற நடைமுறை பெரிதும் பின்பற்றப்படவில்லை.*

*திருக்குறளில் இடம்பெறும்*
*தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க றானென்றாங்*
*கைம்புலத்தா றோம்ப றலை.*[6]

*என்ற குறளுக்கு, பிதிரர் தேவர் விருந்தினர் சுற்றத்தார் தான் என்று சொல்லப்பட்ட ஐந்திடத்துஞ் செய்யும் அறநெறியை வழுவாமற் செய்தல் (இல்வாழ்வானுக்குச்) சிறப்புடைய அறமாம் என்று பரிமேலழகர் உரை தருகிறார். மேலும் பிதிரராவார், படைப்புக்காலத்து அயனாற் படைக்கப்பட்டதோர் கடவுட் சாதி; அவர்க்கிடம் தென் திசையாதலின், தென்புலத்தாரென்றார். 'தெய்வம்' என்றது, சாதியொருமை 'விருந்து' என்பது புதுமை; அஃது ஈண்டு ஆகுபெயராய்ப் புதியராய் வந்தார்மேனின்றது; அவர் இருவகையர்: பண்டு அறிவு உண்மையிற் குறித்துவந்தாரும், அஃது இன்மையிற் குறியாது வந்தாரும் என. 'ஒக்கல்' சுற்றத்தார். எல்லாவறங்களும் தான் உளனாய் நின்று செய்யவேண்டுதலின், தன்னை ஓம்பலும் அறனாயிற்று. அரசனுக்கு இறைப்பொருள் ஆறில் ஒன்றாயிற்று, இவ்வைம்புலத்திற்கும் ஐந்து கூறுவேண்டுதலான் என்பது அறிக'' என்று பரிமேழகர் உரை விளக்கம் தருகிறார். ஆறில் ஒரு பங்கு அரச இறை என்ற முறைமையைப் பரிமேழகர் தம் உரைக்குள் தருகிறார். இவருக்கு முன்னதாக முத்தொள்ளாயிரம் ஆறில் ஒரு பங்கு இறை பற்றி உரைக்கிறது என்பது இங்கு உணரத்தக்கது.*

*அழகிய சீர்ப் புகழ் வேந்தற்கு ஆறில் ஒன்று கொடுத்து ஐந்தில்*
*வழிபடு தெய்வம், பிதிரர், வருவிருந்து, வான்கிளைகள்,*
*விழைவுறவே அளித்த தன்பின், மிகும் ஒன்றால் வியன் குடிமை*
*பழகிய செல்வம் பெருகும் பாண்டி வள நன்னாடே*[7]

*என்று திருப்பூவனப் புராணமும் ஆறில் ஒரு பங்கு அரச வரி என்பதை உணர்த்துகிறது. இவற்றுக்கெல்லாம் முன்னதாக முத்தொள்ளாயிரக் காலத்தில் ஆறில் ஒரு பங்கு வரி என்ற அரச நடைமுறையைச் சோழர்கள் வைத்திருந்தனர் என்பதை உணரமுடிகின்றது.*

வெண் கொற்றக்குடை

சோழ மன்னர்கள் வெண் கொற்றக் குடையின் கீழ் இருந்து ஆட்சி செய்வது என்பது அரச *மரபு.*

*மந்தரம் காம்பா மணிவிசும் போலையாத்*
*திங்கள் அதற்கோர் திலதமா எங்கணும்*
*முற்றுநீர் வைய முழுதும் நிழற்றுமே*
*கொற்றப் போர்க் கிள்ளி குடை ( சோழன் 22)*

*என்ற பாடலில் வெண் கொற்றக் குடையின் சிறப்பினை முத்தொள்ளாயிரம் காட்டுகிறது. ''சோழனின் வெண் கொற்றக்குடை இந்த உலகில் மந்தர மலையைக் குடைப் பிடியாகக் கொள்ளும். நீலநிற வானகத்தைக் குடைத் துணியாகக் கொள்ளும். தண்ணொளி பரப்பும் வெண்ணிலவைக் குடையின் மேற்பகுதியில் காம்பைச் சுற்றி விளங்கும் வட்டமாகக் கொள்ளும். இப்படி அமையப் பெற்ற குடையானது, கடலால் சூழப்பெற்ற இந்த உலகம் முழுதம் சோழ அரசை நினைவூட்டி அமைதி பெறுமாறு அருள் நிழல் தரும்''*[8] *என்று உரைசெய்கிறார் ரெ. முத்துக் கணேசனார். இதற்குச் சிலம்பின் திங்களைப் போற்றுதும் பகுதி ஒப்புமையாகச் சுட்டப்பெற்றுள்ளது.*

*பிறந்த நாளில் அறங்கள் செய்தல்*

சோழ மன்னன் தன் பிறந்த நாளில் பல்வேறு அறம் செய்யும் நடைமுறையை *முத்தொள்ளாயிரம் காட்டுகின்றது.*

*''அந்தணர் ஆவொடு பொன் பெற்றார் நாவலர்*
*மந்தரம் போல் மாண்ட களிறூர்ந்தார் – எந்தை*

*இலங்கிலை வேற் கிள்ளி இரேவதி நாள் என்னோ*
*சிலம்பிதன் கூடிழந்த வாறு (சோழன் 46)*

*என்ற பாடலில் சிலந்தியின் கூடு அழிந்து பிறந்த நாள் மங்கலமாகக் கொண்டாடப் பெற்ற நிலையை முத்தொள்ளாயிரம் காட்டுகிறது.*

*மன்னுயிர் காவல்*

*மன்னுயிர் காவல் தனதான அவ்வுயிருள்*
*கன்னுயிரும் எண்ணப் படுமாயின் என்னுயிர்க்கே*
*சீரொழுகு செங்கோற் செழியற்கே தக்கதோ*
*நீரொழுகப் பாலொழுகா வாறு (பாண்டியன் 7)*

*என்ற பாடலில் மன்னுயிர் காவல் என்பதே மன்னனுக்கு உரிய முக்கியமான பணி என்பதை முத்தொள்ளாயிரம் காட்டுகிறது.*

*‘‘ஒழுங்கு முறை தவறாது புகழோடு செங்கோல் செலுத்தும் பாண்டியனுக்கு நிலை பெற்ற இவ்வுலகத்திலுள்ள உயிர்களைக் காப்பது என்பது உரிமையும் கடமையும் ஆகும். அப்படியிருக்க அந்த முறையில் என்னுடைய உயிரும் ஒன்றல்லவா! அந்த முறையில் என்னுடைய உயிருக்கு ஏதேனும் குறை ஏற்படுமானால் அதைக் காக்க வேண்டியது அரசன்தானே! என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்தால் என்னுடைய உயிரை மட்டும் காக்காமல் மற்றவர்களை மட்டும் காப்பது என்றால் ஒரு தாய் தன் குழந்தைகள் இரண்டில் ஒன்றுக்குப் பாலையும் மற்றதற்கு நீரையும் கொடுப்பது மாதிரியல்லவா ஆகும். இப்படிச் செய்வது பாண்டியனுக்குத் தகுதியாகுமோ?’’[9] என்று அரசன் மண்ணகக் காவல் திறம் பற்றி உரைக்கிறார் உரையாசிரியர் ரெ. முத்துக்கணேசன்.*

*கருணை புரிதல்*

*பாண்டியனை எதிர்த்துப் போரிட்ட மன்னர்கள் உயிர் துறந்தனர். அவர்களின் இல்லத்தரசியர் எரி மூழ்கினர். இன்னும் சில அரசியர் அரசு தொழில் அரியாப் பாலகனை முன்னிறுத்தி பாண்டியனிடம் அவர்தம் நாடு வேண்டி நிற்கின்றனர். அவர்களுக்குப் பாண்டியன் கருணை புரிகிறான்.*

*தொழில் தேற்றாப் பாலகன் முன்னிறீஇப் பின்னின்*
*தழலிலைவேல் காயத்தினார் பெண்டிர் கழலடைந்து*
*மண்ணிரத்தல் என்ப வயங்குதார் மாமாறன்*
*கண்இரத்தம் தீர்க்கு மருந்து (பாண்டியன் 56)*

*என்ற பாடல் பாண்டியனின் கருணைத் திறம் காட்டுகிறது.*

*’’பாண்டிய மன்னனின் சினத்தை மாற்றும் மருந்து ஒன்று உண்டு. அது அவனுடைய ஒளி உமிழும் இலை வடிவமைந்த வேலுக்குச் சீற்றம் பொங்கச் செய்த பகையரசர்களின் மனைவிமார், போர்த்தொழில் தெரியாத தங்கள் மகனைப் பாண்டியனுக்கு முன்னால் நிறுத்தித் தாங்கள் மகனுக்குப் பின்னால் நின்று கொண்டு அவன் திருவடி தொழுது பிழை பொறுத்து அருள் புரிந்து எங்கள் நாட்டைத் தந்தருள வேண்டும் என்று பணிந்து வேண்டிக்கொள்வது’’[10] என்று அரச நடைமுறையைக் காட்டுகிறார் ரெ. முத்துக்கணேசன்.*

*இவ்வாறு சேர சோழ பாண்டிய அரசர்களின் அரச நடைமுறைகள் பலவற்றைக் காட்டி நிற்கிறது முத்தொள்ளாயிரம்.*

*முடிவுகள்*

*முத்தொள்ளாயிரம் சங்கம் மருவிய காலத்தைத் தொடர்ந்து எழுந்த செவ்விலக்கிய நூல் ஆகும். இது புறத்திரட்டு நூலுள் இருந்து பிரித்து எடுக்கப்பெற்றுள்ளது. இதற்குப் பலரும் உரை எழுதியுள்ளனர். தெளிவான எளிமையான உரையாக முத்தொள்ளாயிரத்திற்கு அமைவது ரெ. முத்துக் கணேசனாரின் உரையாகும்.*

*முத்தொள்ளாயிரத்தில் அரச நடைமுறைகள் பல இடம் பெறச் செய்யப்பெற்றுள்ளன. இவற்றைத் தெளிவாக உரையாசிரியர் ரெ. முத்துக்கணேசன் காட்டியுள்ளார். முத்தொள்ளாயிரம் காட்டும் அரச நடைமுறைகள் அதன் காலத்தையும் கணிக்கச் செய்ய உதவுகின்றன.*

முத்தொள்ளாயிரத்தில் அரசன் என்பவன் வெண் கொற்றக்குடை, வேல், செங்கோல் கொண்டு ஆட்சி புரியும் தன்மையினனாக இருந்துள்ளான். அவன் வானத்தில் விளங்கும் திங்கள் போன்று முக்கியத்துவம் வாய்ந்தவன். அவனின் வேலைப் பிழைத்தவர்கள் தன் வாழ்நாளை இழப்பார்கள். மன்னவன் ஆறில் ஒரு பங்கு வரியை மக்களிடம் பெறவேண்டும். என்ற நடைமுறையை முத்தொள்ளாயிரம்தான் முதன் முதலில் பதிவு செய்துள்ளது. மன்னனின் பிறந்த நாளில் அவன் பலருக்கும் கொடை வழங்குபவனாக விளங்குகிறான். மன்னனை எதிர்த்த பகை அரசர்கள் உயிரை இழந்தனர். அவர்களின் மனைவிமார் தீக்குளித்தனர். இன்னும் சிலர் தன் மகனை முன்னிறுத்தி கருணை புரிய கேட்கின்றனர். இவ்வாறு பல்வேறு அரச நடைமுறைகள் முத்தொள்ளாயிரத்தில் பரவிக் கிடக்கின்றன. அவற்றை ஒருங்கு கூட்டித் தொகுப்பின் பண்டைக்கால அரச நடைமுறை குறித்த தெளிவான கருத்துகள் பெறப்பட வாய்ப்புகள் உள்ளன .

சான்றாதாரங்கள்

1. ரெ. முத்துக்கணேசன் (உ. ஆ) முத்தொள்ளாயிரம்,முன்னுரை ப. 14
2. மேலது ப. 19
3. மேலது.ப. 25
4. மேலது. ப. 39
5. பிசிராந்தையார், புறநானூறு பாடல் எண் 184
6. திருவள்ளுவர், திருக்குறள் குறள் எண் 43
7. திருப்பூவணப் புராணம், திருநாட்டுச் சருக்கம் பாடல் எண் 140
8. ரெ. முத்துக்கணேசன் முன்னது, ப. 80
9. மேலது பக் 65-66
10. மேலது ப. 113

துணை நூற் பட்டியல்


- பரிமேலழகர் (உ. ஆ) திருக்குறள்,திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை,
- முத்துக்கணேசன்.ரெ., (உ. ஆ), முத்தொள்ளாயிரம், அழகப்பா பல்கலைக்கழகம்,காரைக்குடி, ஐந்தாம் பதிப்பு 2014


********* ********* ********** ********* ********* ********** ********** **********